# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:25** **தேதி:09.03.2015**

## மத்திய சங்க சுற்றறிக்கை எண் 4

அன்பார்ந்த தோழர்களே,

மத்திய சங்கத்தின் சுற்றறிக்கை எண் 4ன் தமிழாக்கத்தை கீழே வழங்கியுள்ளோம். அதன் சாராம்சத்தை உள்வாங்கிக் கொண்டு அடுத்த கட்ட பணிகளை வெற்றிகரமாக்கிட பாடுபடுவோம்.

### மிகச்சிறப்பான பாராளுமன்றம் நோக்கிய பேரணி

ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் ஒரு மிக பிரமாண்டமான பேரணி 25.02.2015 அன்று டெல்லியில் நடைபெற்றது. தனது பாரம்பரியத்திற்கு ஏற்ப BSNL ஊழியர் சங்கம், அதிகப்படியான உறுப்பினர்களை திரட்டியிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மிஞ்சி அனைத்து மாநிலங்களும் ஊழியர்களை திரட்டியிருந்தனர். BSNL தலைமையகத்தில் இருந்து புறப்பட்ட பேரணி ஜன்பத், டாட்ஸ்டாய் மார்க் வழியாக பொதுக்கூட்டம் நடைபெறும் ஜந்தர் மந்தர் வந்தடைந்தது. இந்த பொதுக் கூட்டத்தில் தோழர் தபன் சென் MP, GS CITU, தோழர் பிரஜேஷ் உபாத்யாயா GS BMS, தோழர் அமர்ஜித் கவுர் Secy, AITUC, தோழர் ஷிவ் கோபால் மிஷ்ரா GS AIRF, திரு தரம்வீர் காந்தி MP AAP மற்றும் FORUMத்தில் உள்ள சங்கங்களின் பொது செயலாளர்கள் உரையாற்றினார்கள். இறுதியாக தோழர் சந்தேஸ்வர் சிங், தலைவர் FORUM, அதன் அமைப்பாளர் தோழர் VAN நம்பூதிரி, தோழர் P.அபிமன்யு GS BSNLEU, தோழர் K.செபாஸ்டியன் GS SNEA மற்றும் தோழர் பிரகலாத் ராய் GS AIBSNLEA ஆகியோர் உள்ளடங்கிய குழு பிரதம மந்திரியின் அலுவலகத்திற்கு சென்று மகஜரை கொடுத்தது. வரலாற்று சிறப்பு மிக்க பாராளுமன்றம் நோக்கிய பேரணியில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் நமது சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். டெல்லி பேரணியை வெற்றிகரமாக்கிட அதிகப்படியான ஊழியர்களை திரட்டிய மாவட்ட/ மாநில செயலர்களுக்கு தனது பாராட்டுதல்களை மத்திய சங்கம் தெரிவித்துக் கொள்கிறது.

### 2015 ஏப்ரல் 21 மற்றும் 22 ஆம் தேதிகளில் இரண்டு நாள் வேலை நிறுத்தம்

27.02.2015 அன்று புதுடெல்லியில் கூடிய FORUM, காலவரையற்ற வேலை நிறுத்தத்தின் தயாரிப்பு பணிகளை விவாதித்தது. தலமட்டங்களில் போதிய பணிகள் நடைபெற

வில்லை என பரவலான கருத்து வந்தது. ஒரு சில பெரிய மாநிலங்கள் உட்பட பல மாநிலங்களில் மாநில அளவிலான கருத்தரங்கங்கள் நடைபெறவில்லை. ஒரு கோடி கையெழுத்துக்கள் பெற வேண்டுமென அறை கூவல் விடப்பட்டிருந்தாலும், 25 லட்சம் கையெழுத்துக்கள் மட்டுமே வந்துள்ளது. எனவே வேலை நிறுத்த தயாரிப்பு பணிகளை முடுக்கி விடவும், BSNLன் புத்தாக்கத்திற்கு ஆதரவாக மக்களின் கருத்துக்களை திரட்டுவதற்கும், இன்னமும் சற்று கால அவகாசம் தேவை என கருதப்பட்டது. இவை அனைத்தையும் கணக்கில் கொண்டு FORUM கீழ்கண்ட முடிவுகளை எடுத்துள்ளது.

1) 2015 மார்ச் 17 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் என்பதற்கு பதிலாக 2015 ஏப்ரல் 21 மற்றும் 22ஆம் தேதிகளில் இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் நடத்துவது.

2) 2015 மார்ச் 12ஆம் தேதி வேலைநிறுத்த அறிவிப்பு கொடுப்பது. அன்றைய தினம் மாவட்ட/ மாநில/ அகில இந்திய மட்டங்களில் சக்தியான ஆர்ப்பாட்டங்களை நடத்துவது.

3) BSNLன் புத்தாக்கம் எனும் நமது கோரிக்கையின் விளம்பரப்படுத்தும் வகையில் 12.03.2015 அன்று மாநில தலைநகர்களில் பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்துவது.

4) எந்தெந்த மாநிலங்களில் மாநில அளவிலான கருத்தரங்கங்கள் நடைபெறவில்லையோ அங்கெல்லாம் உடனடியாக மாநில அளவிலான கருத்தரங்கங்களை நடத்துவது. இத்துடன் மாவட்ட அளவிலான கருத்தரங்கங்கள் நடத்துவது. மற்றும் அனைத்து கிளைப் பொதுக்குழுக் கூட்டங்களையும் நடத்துவது.

5) கையெழுத்து இயக்கத்திற்கான தேதி 31.03.2015 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அதற்குள் அனைத்து மாநிலங்களும், தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்ட வேண்டும்.

## இரண்டு நாள் வேலை நிறுத்தத்தை முழுவெற்றி பெற செய்வோம்

இரண்டு நாள் வேலை நிறுத்தத்திற்கு 1½ மாதங்கள் உள்ளன. இந்த வேலை நிறுத்தத்தை முழு வெற்றியடையச் செய்ய மாநில/ மாவட்ட சங்கங்கள் ஊழியர்கள் மத்தியிலும், பொது மக்கள் மத்தியிலும் சக்தியான பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். FORUMத்தின் அனைத்து முடிவுகளையும் கறாராக அமுலபடுத்த வேண்டும். FORUM த்தின் மிகப்பெரிய அங்கத்தினர் என்ற அடிப்படையில், FORUMத்தின் அனைத்து உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு இந்த வேலை நிறுத்தத்தை 100% வெற்றிகரமாக்கவும், கையெழுத்து இயக்கத்தை முழுமையடையச் செய்யவும் ஒரு பெரும் பொறுப்பு BSNL ஊழியர் சங்கத்திற்கு உண்டு. இந்தப் பணிகளை நமது மாவட்ட மாநில சங்கங்கள் நிறைவேற்றும் என மத்திய சங்கம் கருதுகிறது.

# மத்திய செயலக கூட்ட முடிவுகள்

26.02.2015 அன்று புதுடெல்லியில் BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயலக கூட்டம் நடைபெற்றது. நமது அகில இந்திய தலைவர் தோழர் பல்பீர் சிங் தலைமையில், நமது KG Bose பவனில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் மொத்தமுள்ள 25 நிர்வாகிகளில் 23 தோழர்கள் பங்கேற்றனர். மத்திய அரசு ஊழியர் மகாசம்மேளனத்தின் முன்னாள் பொது செயலாளர்

தோழர் S.K.வியாஸ் மற்றும் BSNL ஊழியர் சங்கத்தின் முன்னாள் உதவி பொது செயலாளரும், முன்னாள் NTR மாநில செயலாளருமான தோழர் சிந்து சிங் அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்திய பின்னர், நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு பங்கேற்ற அனைவரையும் வரவேற்றதுடன், விவாதக் குறிப்பினை முன்வைத்து பேசினார். நமது சங்கத்தின் புரவலர் தோழர் V.A.N. நம்பூதிரி வாழ்த்துரை வழங்கினார். துல்லியமான விவாதங்களுக்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

1. BSNL ஊழியர் சங்கத்தின் 7ஆவது அகில இந்திய மாநாட்டை வெற்றிகரமாக்கிட கடுமையான உழைப்பை செலுத்திய வரவேற்புக் குழுவிற்கு மத்திய செயலகம் தனது முழு மனதுடன் கூடிய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது. கடைசி நேரத்தில் மாநாட்டின் நிகழ்விடத்தை மாற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டதால் மிகப்பெரிய செலவினத்தை வரவேற்புக்குழு சந்திக்க நேரிட்டது. மத்திய சங்கத்தின் ஆதரவு என்பதின் அடையாளமாக வரவேற்புக் குழுவிற்கு ஐந்து லட்ச ரூபாய்களை நன்கொடையாக வழங்குவது என முடிவெடுக்கப்பட்டது.
2. 25.02.2015 அன்று நடைபெற்ற பாராளுமன்றம் நோக்கிய பேரணிக்கு அதிகப்படியான தோழர்களை பங்கேற்கச்செய்து வெற்றிகரமாக்கிய மாநில சங்கங்களின் கடும் முயற்சிகளுக்கு தனது வாழ்த்துக்களை இந்தக்கூட்டம் தெரிவிக்கிறது. இந்த அற்புதமான பணிகளை மேற்கொண்ட மாவட்ட/மாநில சங்கங்களுக்கு தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.
3. JACயின் அறைகூவலின் அடிப்படையில் நடைபெற்ற 27.11.2014 ஒரு நாள் வேலை நிறுத்தத்தை இந்தக் கூட்டம் பரிசீலித்தது. இந்த வெற்றிகரமான வேலை நிறுத்தம் நாடு முழுவதும் மிகபிரமாண்டமாக நடைபெற்றுள்ளது இந்த வரலாற்று சிறப்பு மிக்க வேலை நிறுத்தத்திற்காக பங்கேற்ற ஊழியர்கள், தலைவர்கள் மற்றும் JACக்கு தனது பாராட்டுதல்களை இந்தக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது. JACயின் கோரிக்கை சாசனத்தில் உள்ள முக்கியமான பிரச்சனைகளை தீர்வு காண வேண்டும் என BSNL நிர்வாகத்தை இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. இந்த பிரச்சனைகளின் மீது நிர்வாகத்துடன் தொடர்ந்து விவாதிக்க மத்திய சங்கத்தை இந்தக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.
4. மத்திய சங்கத்தின் பல்வேறு நினைவூட்டுதல்களுக்கு பின்னரும் கீழ்கண்ட மாநிலங்கள், வேலை நிறுத்தம் தொடர்பான மாவட்ட அளவிலான விவரங்களை தராத காரணத்தால் ஒரு முழுமையான பரிசீலனையை இந்தக் கூட்டத்தில் நடத்த முடியவில்லை. அந்தமான், பீகார், இமாசல பிரதேசம், ஜார்கண்ட், கேரளா, மகாராஷ்ட்ரா, ஒரிசா, Inspection Circle, TF ஜபல்பூர், TF கொல்கொத்தா மற்றும் கார்ப்பரேட் அலுவலகம் ஆகியவை அந்த மாநிலங்கள். 10.03.2015க்குள் இந்த மாநிலங்கள் இந்த விவரங்களை மத்திய சங்கத்திற்கு அனுப்ப வேண்டும் என இந்தக் கூட்டம் கேட்டுக் கொண்டுள்ளது. இந்த வேலை நிறுத்தம் தொடர்பான ஒரு விரிவான பரிசீலனை அடுத்த மத்திய செயற்குழுவில் நடத்தப்படும்.
5. BSNLன் புத்தக்கத்திற்காக FORUM விடுத்த வேலை நிறுத்த அறை கூவல் தொடர்பாக, அதன் முடிவுகளை அமுலாக்க நேர்மையான முயற்சிகளை மேற்கொண்ட அனைத்து மாநில சங்கங்களையும் இந்தக் கூட்டம் பாராட்டுகிறது. மிகபிரமாண்டமான மாநிலந்

தழுவிய கருத்தரங்களையும், பெரும் அளவிலான கையெழுத்து இயக்கங்களையும் பல மாநிலங்கள் நடத்தியுள்ளன.

6. அதே சமயம் இன்னும் பல மாநிலங்களில் மாநில அளவிலான கருத்தரங்கங்கள் நடைபெறாததையும், கையெழுத்து இயக்கம் சக்தியாக நடத்தப்படாததையும் இந்தக் கூட்டம் கவனிக்கிறது. மீதமுள்ள மாநிலங்கள் மாநில அளவிலான கருத்தரங்கங்களை உடனடியாக நடத்த வேண்டும் என இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது. மேலும் ஒரு ஊழியருக்கு 50 கையெழுத்துக்கள் எனும் இலக்கை அனைத்து மாநிலங்களிலும் விரைவில் எட்ட வேண்டும் எனவும் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.
7. FORUM அறைகூவல் விட்டுள்ள வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட அனைத்து தயாரிப்பு பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என குஜராத், ஜம்மு காஷ்மீர், NTR மற்றும் கார்ப்பரேட் அலுவலக மாநில சங்கங்களை கேட்டுக் கொள்வதென இந்தக் கூட்டம் முடிவு செய்துள்ளது.
8. அடுத்த மத்திய செயற்குழுவை ஏப்ரல் கடைசி வாரம் அல்லது மே முதல் வாரத்தில் நடத்திட இந்தக் கூட்டம் முடிவு செய்துள்ளது. இந்த மத்திய செயற்குழுவை நடத்த பஞ்சாப் மாநிலம் ஏற்றுக் கொண்டுள்ளது.

FORUM மற்றும் மத்திய செயலகக் கூட்டத்தின் அனைத்து முடிவுகளையும் திறம்பட அமுலாக்க வேண்டும் என மத்திய சங்கம் கேட்டுக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**